# தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

## ஆறாவது கூட்டத் தொடர்

## உடுக்குறியிட்ட வினாக்கள்

----

**மொத்த வினாக்கள் 10**

----

### வாய்க்கால்களைத் தூர்வாருதல்

*141 **திரு. மு. பூமிநாதன் (மதுரை தெற்கு ):**

மாண்புமிகு **நீர் வளங்கள்** துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா :- அ) மதுரை (தெற்கு) தொகுதியிலுள்ள கிருதுமால் நதி, அனுப்பானடி வாய்க்கால், பனையூர் வாய்க்கால் மற்றும் சிந்தாமணி வாய்க்கால் ஆகியவற்றைத் தூர்வார அரசு முன்வருமா ?

ஆ) ஆம் எனில், எப்போது ?

----

### கூட்டுக் குடிநீர் திட்டம்

*142 **திரு. துரை. சந்திரசேகரன் (திருவையாறு):**

மாண்புமிகு **நகராட்சி நிருவாகம்** துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா :- அ) திருவையாறு தொகுதி, திருவையாறு, பூதலூர் மற்றும் தஞ்சாவூர் ஆகிய ஊராட்சி ஒன்றியங்களில் உள்ள 54 ஊராட்சிகளில் செயல்படும் கொள்ளிடம் கூட்டுக் குடிநீர் திட்டத்தை மறுசீரமைப்பு செய்ய அரசு முன்வருமா ?

ஆ) ஆம் எனில், எப்போது ?

----

## தமிழ் இலக்கிய மறுமலர்ச்சி நாள்

*143 **திரு. கே.பி. முனுசாமி (வேப்பனஹள்ளி):**

மாண்புமிகு **தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தி** துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா :- டாக்டர் உ.வே. சாமிநாதர் அவர்களின் பிறந்த நாளை தமிழ் இலக்கிய மறுமலர்ச்சி நாளாகக் கொண்டாட அரசு முன்வருமா ?

----

## கால்நடை மருத்துவமனை

*144 **திரு. அ. நல்லதம்பி (கெங்கவல்லி):**

மாண்புமிகு **மீன்வளம் - மீனவர் நலம் மற்றும் கால்நடை பராமரிப்பு** துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா :- கங்கவல்லி தொகுதி, கோவிந்தம்பாளையம் ஊராட்சியில் கால்நடை மருத்துவமனை அமைக்க அரசு ஆவன செய்யுமா ?

----

## நெல் கொள்முதல் நிலையம்

*145 **திரு. J.L. ஈஸ்வரப்பன் (ஆற்காடு):**

மாண்புமிகு **உணவு மற்றும் உணவுப்பொருள் வழங்கல்** துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா :- இராணிப்பேட்டை மாவட்டம், ஆற்காடு வட்டம், செய்யாத்துவண்ணம் கிராமத்தில் நேரடி நெல் கொள்முதல் நிலையம் அமைக்க அரசு முன்வருமா ?

----

## மின்மாற்றி

*146 **திரு. துரை. சந்திரசேகர் (பொன்னேரி):**

மாண்புமிகு **மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை** துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா :- அ) பொன்னேரி தொகுதி, சோழவரம் ஊராட்சி ஒன்றியம், மாதவரம் ஊராட்சியில் புதிய மின்மாற்றி அமைக்க அரசு முன்வருமா ?

ஆ) ஆம் எனில், எப்போது ?

----

## மருத்துவ உபகரணங்கள்

*147 **திரு. கே.ஏ. செங்கோட்டையன் (கோபிசெட்டிப்பாளையம்):**

மாண்புமிகு **மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வு** துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா :- அ) கோபிசெட்டிபாளையம் தொகுதி, P. வெள்ளாபாளையம், கூடுதல் ஆரம்ப சுகாதார நிலையத்திற்குத் தேவையான மருத்துவ உபகரணங்களை வழங்க அரசு முன்வருமா ?

ஆ) ஆம் எனில், எப்போது ?

----

## பேருந்து வசதி

*148 **திரு. ப. அப்துல் சமது (மணப்பாறை):**

மாண்புமிகு **போக்குவரத்து** துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா :- மணப்பாறையிலிருந்து இராமேஸ்வரத்திற்கு பாலக்குறிச்சி மற்றும் புதுக்கோட்டை வழியாக புதிய வழித்தடத்தில் பேருந்து இயக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா ?

----

## குடமுழுக்கு

*149 **திரு. ஆ. அருண்மொழிதேவன் (புவனகிரி):**

மாண்புமிகு **இந்து சமய மற்றும் அறநிலையங்கள்** துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா :- புவனகிரி தொகுதி, வளையமாதேவி அருள்மிகு வேதநாராயண பெருமாள் திருக்கோயிலைப் புனரமைத்து குடமுழுக்கு நடத்த அரசு முன்வருமா ?

----

## புதிய நூலகக் கட்டடம்

*150 **திரு. இரா. அருள் (சேலம் மேற்கு):**

மாண்புமிகு **பள்ளிக் கல்வி** துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா :- சேலம் (மேற்கு) தொகுதி, கே.ஆர். தோப்பூரில் உள்ள கிளை நூலகத்திற்கு புதிய கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா ?

----

**சென்னை-600009.** **முனைவர் கி. சீனிவாசன்,**

**10 டிசம்பர், 2024.** **முதன்மைச் செயலாளர்**